**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 92/2017**

**வாதி தரப்பு சாட்சி–2 ஸ்ரீதர் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 29.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி</u>**

1) **எனக்கு கடவூர் வட்டாட்சியர் சாட்சியம் அளிக்க வழங்கிய கடிதம் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சர்வே எண் 959/2 நில ஒப்படைப்பு செய்யப்பட்டது சம்பந்தமான கோப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த கோப்பை கொண்டு வந்தேனா என்றால் இன்று கொண்டு வரவில்லை. 2016–2017 வருடத்திற்குரிய நில ஒப்படைப்பு செய்யப்பட்டவர்களின் விபரம் குறித்த பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். **அதன் உண்மை நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பொதுவாக ஒரு பட்டா வழங்கப்பட்ட கோப்புகளில் பட்டா கோரிய விண்ணப்பம் இருக்கும் என்றால், கோப்பினை பார்த்தால்தான் தெரியும். இந்த வழக்கில் அரசாங்கம் தரப்பினரா என்றால் அதுபற்றி தெரியாது. நான் கொண்டு வந்துள்ள பதிவேட்டின் வரிசை எண் 246ல் பாப்பனம்பட்டி என கண்டுள்ளது என்றால் சரிதான். 246 வரிசை எண்ணைத் தவிர வேறு பதிவுகள் எதுவும் அந்த பக்கத்தில் இல்லை என்றால் சரிதான்.

2) வரிசை எண் 246ல் கையெழுத்து செய்துள்ள வட்டாட்சியர் பெயர் தெரியுமா என்றால் தெரியவில்லை. வரிசை எண் 246ல் 2011 என்று எழுதப்பட்டுள்ளது என்றால், அது என்ன எண் என்று தெரியவில்லை. வரிசை எண் 246ல் 0.01.0 என்பதற்கு மேலாக 01.00 என சிவப்பு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிவு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வரிசை எண் 247 காலியாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பக்கத்தில் வழங்கப்பட்டவை என 247 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழங்கப்பட்டவை என்ற இடத்தில் உள்ள 247 என்பது வரிசை எண் 247 ஐ சேர்த்தா என்றால் அதுபற்றி

தெரியவில்லை. 247 ற்கு அடுத்த பக்கத்தில் 248 லிருந்து தொடர்ச்சியாக பதிவுகள் உள்ளது என்றால் சரிதான். வரிசை எண் 246 ல் நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான்கெல்லைகள் குறிப்பிட்டு தனியாக பதிவேடு உள்ளதா என்றால் பார்த்தால்தான் தெரியும்.

3) வரிசை எண் 246 பதிவைப் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக இல்லை. நான் கொண்டு வந்துள்ள பதிவேட்டில் வரிசை எண் 252 லிருந்து 508 வரை எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால், என்னிடம் உள்ள பதிவேட்டில் உள்ள அனைத்து பட்டாக்களும், 2016–2017 ம் வருடத்தில் வழங்கப்பட்டது. வரிசை எண் 252 ல் இருந்து 508 வரை உள்ள பதிவுகளில் வட்டாட்சியர் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல, வரிசை எண் 303 முதல் 307 வரை வட்டாட்சியர் கையெழுத்து உள்ளது. மற்ற பதிவுகளில் இல்லை.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) சா.சா.ஆ.4, 2016 – 2017 வருடத்திற்குரி நில ஒப்படைப்பு நமுனா வழங்கியதற்கான பதிவேடு. மேற்படி நில ஒப்படைப்பு யாருக்கு வழங்கப்படும் என்றால், காலி இடமாக உள்ளதை யார் அனுபவத்தில் உள்ளதோ அவர்களுக்கு கொடுப்போம். நில ஒப்படைப்பு செய்யப்படும் நிலமானது என்ன வகைப்பாடாக வருவாய்துறை ஆவணத்தில் இருக்கும் என்றால் காலி நத்தமாக இருக்கும் இடத்தைத்தான் அனுபவத்தில் உள்ளவர்களுக்கு ஒப்படைப்பு செய்வோம். நிலம் ஒப்படைக்கப்பட்ட இடத்தில், ஒப்படைப்பு பெற்றவர்கள் வீடுகட்டி அனுபவம் செய்து வந்தால் பின்னிட்டு அதை உறுதி செய்து பட்டா வழங்குவோம் என்றால் சரிதான். சா.சா.ஆ.4 பதிவேட்டில் சிவப்பு மையினால் எழுதப்பட்டுள்ள 2011 என்பது வருடமா என்றால் இல்லை. மேற்படி பதிவேட்டில் உள்ள பதிவுகளில் வெவ்வேறு எண்கள் குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வரிசை எண் 246 யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால், நாச்சாயி கணவர் பெயர் திருப்பதி, பாப்பனம்பட்டி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெயருக்கு அடுத்து உள்ள காலத்தில் சொத்து எந்த கிராமத்தை சேர்ந்தது என்பது குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்து உள்ள காலம் பயனாளியின் சமூகத்தை குறிக்கிறது என்றால் சரிதான். அதற்கு அடுத்து உள்ள காலம் சர்வே எண்ணையும், அதற்கு அடுத்து விஸ்தீரணத்தையும் குறிக்கிறது. வரிசை எண் 246 ல் நாச்சாயி என்பவருக்கு, சர்வே எண் 959/2 ல் 0.01.0 இடம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.4 பதிவேட்டின் இரண்டாம் பக்கத்தில் ஒவ்வொரு காலமும் எதைக் குறிக்கிறது என்பதற்கான அட்டவணை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரிசை எண் 246 ல் உள்ள 0.01.0 என்பது எதன் அளவு என்றால், 0 என்பது ஹெக்டேர், .01 என்பது ஏர்ஸ், .0 என்பது சதுர மீட்டரை குறிக்கும். மேற்படி இடம் 2 செண்ட் 47 சதுர மீட்டர் ஆகும்.

3) பொதுவாக அரசாங்கத்தால் நிலம் ஒப்படைப்பு செய்யும் போது அதிகபட்சம் எவ்வளவு நிலம் கொடுப்பார்கள் என்றால் அதுபற்றி தெரியவில்லை. வரிசை எண் 246 ல் குறிப்பிட்டுள்ள நி.மு.வீ.ம.ப.எண்.246/2016-2017 என்பது எதைக் குறிக்கிறது என்றால் செயல்முறை எண்ணாகும். சர்வே எண் 959/2 நிலம் யாருக்கு, எப்போது ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதை காட்டுவதற்கான பதிவேடுதான் சா.சா.ஆ.4 என்றால் சரிதான். சர்வே எண் 959/2 இடத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். அந்த இடம் காலி நத்தமாக உள்ளதா என்றால் ஆமாம். சர்வே எண் 959/2 ன் வடபுறம் தார்ரோடு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4, சர்வே எண் 959/12 க்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான்.

4) நில ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருபவர்களுக்கு வா.சா.ஆ.4 ஐ போன்று மனைவரி தோராய பட்டா வழங்குவோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் வரிசை எண் 246 ல் வழங்கப்பட்ட நில ஒப்படைப்பு நமுனா என்றால் ஆமாம். **அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நத்தம் நிலத்தை குறித்து அ பதிவேடு, புல வரைபடம் ஆகியவை எங்கள் அலுவலகத்தால் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். சர்வே

எண் 959/2 ல் பாதையோ அல்லது வேறு கட்டுமானங்களோ புல வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 959/12 ற்கு கீழ்புறம், கிழமேலாக பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து ரோடு புல வரைபடத்தில் உள்ளதா என்றால் இல்லை, நான் நேரில் பார்வையிட்ட வகையில் சொல்கிறேன்.

5) மேற்படி கிழமேல் பஞ்சாயத்து ரோடு வழியாக சென்றால் பிரதான தார்சாலையை அடையலாம் என்றால் சரிதான். சர்வே எண் 959/12 ல் கெட்டிமெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்னிட்டு எவ்வளவு காலம் கழித்து பட்டா வழங்கப்படும் என்றால், 10 வருடங்கள் கழித்து வழங்கப்படும். நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்திற்கு தீர்வை வாங்கவில்லை என்றால், கட்டுமானம் கட்டியிருந்தால் மட்டும் தீர்வை வாங்குவோம்.

**<u>அனுமதியின் பேரில் மறுவிசாரணை:</u>**

1) பொதுவாக நத்தம் நிலத்தை அனுபவம் செய்து வருவதைக் காட்ட சா.சா.ஆ.4 பதிவேட்டில் உள்ளதா என்றால் இல்லை. நாச்சாயி ஏற்கெனவே சர்வே எண் 959/2 இடத்தை அனுபவம் செய்து வந்ததாக சா.சா.ஆ.4 ல் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு செண்ட், ஹெக்டேர், ஏர்ஸ், சதுர கெஜம் என்பது பற்றிய வேறுபாடு தெரியும் என்றால் சரிதான். சா.சா.ஆ.4 பதிவேட்டில் உள்ள 0.01.0 என்பது செண்ட் இல்லை என்றால் சரிதான், சதுர கெஜம் இல்லை என்றாலும் சரிதான். பொதுவாக 1 செண்ட் என்பதை எவ்வாறு குறிப்பிடுவோம் என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. நான் இடத்தை பார்வையிட சென்றபோது நாச்சாயி என்பவரோ, அவரது கணவரோ இருந்தார்களா என்றால் இல்லை, நான் எனது உதவியாளருடன் சென்றிருந்தேன்.

2) நான் சென்ற போது மாரியம்மாள், சீனிவாசன், வெள்ளையம்மாள், சண்முகம், கண்ணன் ஆகியோரும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 959/12 ல் கிழக்குபுறம் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்பதற்கான ஆவணம்

ஏதாவது பார்த்தேனா என்றால் இல்லை, சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டிருந்ததால் பஞ்சாயத்து ரோடு என்று சொன்னேன். சா.சா.ஆ.1 ன் படி சர்வே எண் 959/12 க்கு கிழக்குபுறம் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.4 பதிவேட்டில் உள்ள நபர் அனுபவத்தில் உள்ளதை காட்ட பதிவேட்டை பார்த்தால்தான் தெரியும். மேற்படி அனுபவத்தை காட்டும் பதிவேடு சா.சா.ஆ.4 ன் பாகம்தான் என்றால் சரிதான். சர்வே எண் 959/12 ற்கு கிழக்குபுறம் ரோடு இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பொதுவாக ஒப்படைப்பு நமூனா வழங்கப்பட்ட பின்னிட்டுதான் நத்தம் நிலத்தில் அனுபவத்தில் உள்ளவர்கள் பற்றிய விபரம் எங்கள் பதிவேட்டில் இருக்கும் என்றும், அதற்கு முன்பு அனுபவத்தில் இருப்பவர்கள் பற்றிய விபரம் குறித்த பதிவேடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக அனுபவத்தில் உள்ளவர்கள் கொடுக்கும் விண்ணப்பத்தின் அடிப்படையில் தள விசாரணை செய்து அனுபவத்தை ஊர்ஜிதம் செய்த பின்னிட்டுதான் நில ஒப்படைப்பு செய்யப்படும் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**